## தேசியத் தலைவராக உயர்ந்து நிற்கும் எங்கள் தளபதி!

# புறமுதுகிட்டு ஓடிய ஆளுநர் ரவி!

## சைதையில் பல்லாயிரவர் திரண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆவேசம்!

**சென்னை, ஜன. 8-**

**தேசியத் தலைவராக உயர்ந்து நிற்கிறார் எங்கள் தளபதி என்றும் ஆளுநர் ரவி புறமுதுகிட்டு ஓடினார் என்றும் சைதையில் பல்லாயிர வர் திரண்ட கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் - கழக நாடாளு மன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கண்டன உரையாற்றுகையில் ஆவேசத்துடன் குறிப்பிட்டார்.**

தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தி வரும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்தும், பா.ஜ.க. - அ.தி.மு.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும், சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில், நேற்று (07.01.2025 - செவ்வாய்க்கிழமை), சென்னை சைதாப்பேட்டையில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பி, தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கண்டன உரையாற்றினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. ஆற்றிய கண்டன உரை வருமாறு:-

"ஆளுநர் ரவி மூன்றாவது ஆண்டாக ஹேட்ரிக் அடிச்சிருக்காரு எதுலனு கேட்டா ஸ்கூல் புள்ளைங்கள்லாம் பரிட்சைக்கு படிக்காம போயிட்டு அம்மாகிட்ட டீச்சர்கிட்ட ஏதாவது ஒரு கதை சொல்லும்.. வயிறு வலிக்குது, சுண்டுவிரல் முனையில வலிக்குது பல்லு வலிக்குது இப்டி ஏதாச்சும் ஒரு காரணம் சொல்லும், அதே போலத்தான் ஆளுநர் ரவியும் சொல்லியிருக்காரு. நீங்க வீட்லேந்து லீவு லட்டர் எழுதி அனுப்புங்க. முதலமைச்சர் போனா போகுது வீட்லயே இருனு சொல்லி விட்டுருவாரு.

எதுக்காக அங்கேந்து வந்து பாதியிலேயே எழுந்து ஓடுறீங்க? எங்களுக்கு பழகிடிச்சு. எதிரிகள் எல்லாரையும் புற முதுகிட்டு ஓட வைக்கும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்.

### எனக்கே ஆளுநரின் செயல் பாவமா இருக்கிறது!

அதனால தலைவர் கலைஞர் வழியில் வந்திருக்கக் கூடிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், ஒவ்வொரு முறையும் ஓட வைக்கிறார். நீங்களா வந்து ஏம்ப்பா அசிங்கப்பட்டு, அவமானப்பட்டு புறமுதுகிட்டு அவர் எழுந்தாலே பயந்து ஓடுறீங்களே அதனாலதான் சொல்றேன். வீட்லயே இருந்து லீவு லட்டர் எழுதிப் போடுங்க. நம்ம முதலமைச்சருக்கு நல்ல மனசு. எல்லாருக்கும் நல்லதே பண்ணுவார். உங்களையும் ஒண்ணும் பண்ணாம விட்ருவாரு. தயவு செய்து வந்து அசிங்கப்படாதீங்க... எனக்கே பாவமா இருக்கு. சரியா?

தமிழ்நாட்டைப் பற்றி எதுவுமே தெரியாமல் இங்கே வந்துவிட்டீர்கள். சட்டமன்றத்தில் நாங்கள் கடைப்பிடித்து வருகிற பாரம்பரியம், பண்பாடு, வழிமுறை, மரபு. இதுதான் எங்கள் சட்டம். தமிழ்த்தாய் வாழ்த்துதான் முதலில் பாடப்படும், அதற்குப் பிறகுதான் எல்லாம். நாங்கள் தேசிய கீதத்தை அவமதிக்கவில்லை. தேசிய கீதத்துக்கு இடம் இருக்கிறது தமிழ்த் தாய்க்கு பிறகு.



நீங்க ஏன் தேசிய கீதத்தைப் பத்தி பேசறீங்கனு எனக்குப் புரியலை. உங்களுக்கும் இந்த நாட்டின் விடுதலைக்கும் என்ன சம்பந்தம் சொல்லுங்க?

### போர் மூண்டபோது அதிக நிதி தந்தவர் கலைஞர்!

**தமிழ்நாட்டில் இருந்து இந்த நாட்டின் விடுதலைக்காக தந்தை பெரியார் உட்பட எத்தனையோ பேர் போராடி சுதந்திரத்தைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். ஆனால் நீங்கள் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்துவிட்டு வெளியே ஓடி வந்தவர்கள். உங்களுக்கும் இந்த நாட்டின் சுதந்திரத்துக்கும், உரிமைகளுக்கும், தேசிய கீதத்துக்கும் என்ன சம்பந்தம்? அதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்?**

இந்த நாட்டிலே ஒரு போர் மூண்டபோது, இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களை விட அதிக நிதி திரட்டித் தந்தது தலைவர் கலைஞர் அவர்கள். அப்போது நீங்க எங்க இருந்தீங்க?

அதனால் இந்த நாட்டைக் காப்பாற்றுவது, நாட்டின் விடுதலையைக் காப்பாற்றுவது. தேசிய கீதத்தைக் காப்பாற்றுவது ஆகியவற்றில் உங்களை விட எங்கள் முதலமைச்சருக்கு அதிகமாகவே தெரியும்.

இன்றைக்கு இந்த நாட்டின் அரசியலமைப்பு, நாட்டின் உரிமைகளை பாதுகாப்பதற்காக இன்று ஒரு தேசியத் தலைவராக விஸ்வரூபம் எடுத்து நின்று கொண்டிருக்க கூடிய தலைவர்தான் எங்கள் தலைவர் ஸ்டாலின். அதனால நீங்கள் பாடம் எடுக்கும் இடத்தில் நாங்கள் இல்லை. நாங்களெல்லாம் பி.ஹெச்.டி. பாஸ் பண்ணிவிட்டோம். நீங்கள் இன்னும் எலிமெண்ட்டரி ஸ்கூல் காரணம் சொல்லாமல் ஓடிக்கிட்டிருக்கீங்க. அதனால இதெல்லாம் விட்டுடுங்க.

### ஓட ஓட விரட்டப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை!

தமிழ்நாடு எத்தனை போராட்டம், உயிர் தியாகத்துக்குப் பிறகு தமிழ்நாடு என பெயர் பெற்றது. இங்கே வந்து உட்கார்ந்துகொண்டு தமிழ்நாடுனு சொல்லாதே தமிழகம் என்று சொல் என்று சீண்டுவது தொடர்ந்து ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டை, தமிழ்நாட்டு மக்களின், தமிழர்களின் உணர்வுகளை, சுமயரியாதையை அவமானப்படுத்திக்கிட்டே இருப்பீர்கள். நாங்கள் இதை பாத்துக்கிட்டே இருப்போம்னு நினைச்சீங்கன்னா, நீங்கள் ஓட ஓட விரட்டப்படும் நாள் வெகு தொலைவில் இல்லை.

### எங்கள் முதல்வர் பொறுமையானவர்!

எங்கள் முதல்வர் மிகவும் பொறுமையாக இருக்கக் கூடியவர். அந்த பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. பொறுத்தது போதும் மனோகரா பொங்கி எழு என எழுதிய தலைவர் கலைஞரின் வழி வந்தவர்கள் நாங்கள்.

அதனால் பொறுத்தது போதும் என்ற நாள் வருவதற்கு முன்னால், உங்கள் நாவை அடக்குங்கள். உங்களது நடத்தையை சரி செய்துகொள்ளுங்கள்.

இந்த ஆர்ப்பாட்டம் எங்களுக்காக இல்லை நீங்கள் இருங்கள். இருந்தீங்கன்னா பி.ஜே.பி. சொல்றாங்கல்ல எங்கள் ஓட்டு சதவிகிதம் ஏறிக்கிட்டே இருக்குனு. அது ஆளுநரால் ஒவ்வொரு நாளும் இறங்கிக்கிட்டே இருக்கும். அதனால அவரையே ஆளுநராக இங்க வைத்துக்கொள்ளுங்கள். ஏனென்றால்; ஆர்.எஸ்.எஸ், பா.ஜ.க.வின் பரிவாரங்களின் கோர முகத்தை ஒவ்வொரு நாளும் தமிழனுக்கு நினைவுபடுத்துக் கொண்டிருக்கக் கூடியவராக ஆர்.என்.ரவி இருக்கிறார்.

### ஆளுநர் ரவி இருக்கும்வரை பா.ஜ.க. ஒரு ஓட்டுகூட வாங்க முடியாது!

அதனால அவர் ஆளுநராக இருப்பது பற்றி எங்களுக்கு பிரச்சினை இல்லை. உங்க நல்லதுக்காக சொல்றேன். கடைசியில ஒரு ஓட்டு கூட வாங்க முடியாத அளவுக்கு பி.ஜே.பி.யை கொண்டு போய் நிறுத்தக் கூடிய நிலை வந்து விடக்கூடாது என்றுதான் அவர் தமிழக ஆளுநராக இருக்க வேண்டாம் வேண்டாம் என்று தளபதி உத்தரவின் பேரில் இந்த ஆர்பாட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அதனால உங்கள் நல்லதுக்கும் சேர்த்து சொல்கிறேன் தயவு செய்து கூட்டிட்டுப் போயிடுங்க. இல்லேன்னா நீங்கதான் கஷ்டப்படுவீங்க. ஆளுநராக அவர் இங்கே இருக்க இருக்க எங்கள் தளபதியின் புகழ் உயர்ந்துகொண்டே இருக்கும். பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ்.க்கு எதிரான எங்களது போராட்டம் தொடரும். தமிழ்நாட்டின் உரிமைகளை அரணாக நின்று பாதுகாப்போம். இந்த செய்தியை நீங்களே தமிழ்நாட்டு மக்களிடம் கொண்டு சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்.

### ஆளுநருக்கு ஏன் அரசியல்?

ஒவ்வொரு வருடமும் பொங்கல் புதுவருடம் போல ஆளுநர் சட்டமன்றத்துக்கு சென்று சர்ச்சையைக் கிளப்புவது என்பது தொடர்ந்து நடைபெறக் கூடிய ஒன்றாக மாறிக் கொண்டிருக்கிறது. இங்கே தயாநிதி அவர்கள் குறிப்பிட்டது போல ஆளுநர் என்பவர் ரப்பர் ஸ்டாம்ப். ஏதாவது திறப்பு விழாவுக்கு கூப்பிட்டாலோ, நிகழ்ச்சிகளுக்கு கூப்பிட்டாலோ போங்க. இல்லேன்னே பேசாம வீட்லயே இருங்க. அப்படி பேசினா என்ன பேசணும்னு புரிந்துகொண்டு பேசுங்க.

இதையெல்லாம் விட்டுட்டு ஆளுநருக்கு ஏன் அரசியல்? ஆளுநர் அரசியல் பேச வேண்டிய தேவையில்லை, அவசியம் இல்லை, நியாயம் இல்லை. ஆனால் தொடர்ந்து அரசியல் பேசிக் கொண்டு, அரசை விமர்சனம் பேசிக் கொண்டிருக்கிறார்.

இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் நல்லாட்சியை திராவிட மாடல் முதல்வர் அண்ணன் தளபதி நடத்திக்கொண்டிருக்கிறார். ஆனால் திராவிட மாடல் ஆட்சி என்று சொல்வதற்கே உங்களுக்கு கஷ்டம். பயம். திராவிடம் என்று சொன்னாலே அவர்களுக்கு தூக்கத்தில் கனவில் கூட பயம் ஏற்படும் அளவுக்கு நம்முடைய திராவிட மாடல் ஆட்சி, நம் முதலமைச்சருடைய ஆட்சி இங்கே நடந்துகொண்டிருக்கிறது.

மூன்றாவது வருடமாக இப்போது சட்டமன்றத்தில் இருந்து ஆளுநர் வெளியே போய்விட்டார். நான் கேட்கிறேன். மற்ற மாநிலங்களில் எல்லாம் ஆளுநர்களை மாற்றுகிறீர்கள். கேரளாவுல மாத்திருக்கீங்க, மணிப்பூர்ல மாத்திருக்கீங்க, பீகார்ல மாத்திருக்கீங்க. ஏன் இங்க தமிழ்நாட்ல மட்டும் பிடிச்சு வச்சா மாதிரி, சாசனம் எழுதி வச்சா மாதிரி ஏன் இவரை இங்கயே வச்சிருக்காங்க பி.ஜே.பி.?

நாம் ஒன்றை புரிந்துகொள்ள வேண்டும். தொடர்ந்து அவர்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கக் கூடிய ஒரு இயக்கம் தி.மு.க., அவர்களை வைக்கவேண்டிய இடத்தில் வைத்துக் கொண்டிருக்கக் கூடிய தலைவர் முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்கள். அதனால்தான் நமக்கு தொடர்ந்து தொல்லை தரவேண்டும், தொடர்ந்து குழப்பங்களை உருவாக்க வேண்டும், தங்களுக்கு ஓட்டு போடாத தமிழ் மக்களை தொடர்ந்து கொச்சைப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும், தமிழ்த் தாயை, நம்முடைய உணர்வோடு கலந்திருக்கக் கூடிய தமிழ் மொழியை, தொடர்ந்து அவமானப்படுத்தி, தமிழுக்கும் தமிழர்களுக்கும் அவமரியாதை தரவேண்டும் என்பதற்காக இவரை இங்கே கொண்டு வந்து வைத்து. நமக்கு தொடர்ந்து என்னென்ன இன்னல்களை எல்லாம் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்து கொண்டிருக்கிறது பி.ஜே.பி. ஒன்றிய ஆட்சி.

### எதையும் தாங்கக் கூடியவர்கள் கழகத்தினர்!

ஆனால், எது வந்தாலும் தாங்கி நிற்கக் கூடியவர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்கள். அவர்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். நீ ஒவ்வொரு நாளும் தரக் கூடிய தொல்லைகளை எங்கள் தலைவரும், எங்கள் இயக்கமும் படிக்கட்டுகளாக மாற்றி உயர்ந்து உயர்ந்து நீங்கள் இல்லாத நிலையை உருவாக்கிவிடுவோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.

உடன், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், சண்முகம், கிரிராஜன், கனிமொழி சோமு, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்டக் கழகச் செயலாளர் நே.சிற்றரசு, மாவட்டச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினர்களுமான மயிலை த. வேலு, சுதர்சனம், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, பரந்தாமன், கருணாநிதி, வெற்றியழகன், எபிநேசர், ஐட்ரீம் மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் திரளான கலந்து கொண்டனர்.

### விஸ்வரூபம் எடுத்துக்கொண்டிருக்கும் எங்கள் தலைவர் தளபதி!



**இன்றைக்கு இந்த நாட்டின் அரசியலமைப்பு, நாட்டின் உரிமைகளை பாதுகாப்பதற்காக இன்று ஒரு தேசிய;j தலைவராக விஸ்வரூபம் எடுத்துநின்றுகொண்டிருக்க கூடிய தலைவர்தான் எங்கள் தலைவர் ஸ்டாலின். அதனால நீங்கள் பாடம் எடுக்கும் இடத்தில் நாங்கள் இல்லை. நாங்களெல்லாம் பி.ஹெச்.டி. பாஸ் பண்ணிவிட்டோம். நீங்கள் இன்னும் எலிமென்ட்டரி ஸ்கூல் காரணம் சொல்லாமல் ஓடிக்கிட்டிருக்கீங்க. அதனால இதெல்லாம் விட்டுடுங்க.**

---

## தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவர்

# கே.வி.தங்கபாலுவுக்கு "பெருந்தலைவர் காமராசர் விருது"!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜன.15–அன்று வழங்குகிறார்!

**சென்னை, ஜன. 8-**

**2024ஆம் ஆண்டிற்கான "பெருந்தலைவர் காமராசர் விருது'க்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி முன்னாள் தலைவரும் முன்னாள் ஒன்றிய அமைச்சருமான கே.வி. தங்கபாலு அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.1.2025 அன்று வழங்கி சிறப்பிக்கவுள்ளார் என்றும் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.**

இது குறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

தெருவெங்கும் பள்ளிகள் திறந்து, இலவசக் கல்வித் திட்டம், சத்துணவுத் திட்டம் முதலிய திட்டங்கள் மூலமாகத் தமிழ்ச் சமுதாயம் கல்வி எனும் கைவிளக்கு ஏந்தி முன்னேற வழிவகுத்து வரலாறு படைத்த பெருந்தலைவர் அவர்களின் அடிச்சுவட்டில் தொண்டாற்றி வரும் ஒருவருக்கு பெருந்தலைவர் காமராசர் விருது 2006ஆம் ஆண்டு முதல் வழங்கப் பெற்று வருகிறது. இதுகாறும் 18 அறிஞர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

அவ்வரிசையில் 2024ஆம் ஆண்டுக்கான விருதுக்கு, அகில இந்திய காங்கிரஸ் கட்சி உறுப்பினராகவும், தமிழக இளைஞர் காங்கிரஸ் தலைவராகவும், தமிழக காங்கிரஸ் கட்சிப் பொதுச்செயலாளராகவும், கட்சித் தலைவராகவும் ஒன்றிய இணை அமைச்சராகவும், ஒரு முறை நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும், இருமுறை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியதோடு கடந்த 50 ஆண்டு காலமாக பொது வாழ்க்கையில் ஈடுபட்டுவரும் கே.வி.தங்கபாலு அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



பெருந்தலைவர் காமராஜர் விருது பெறும் விருதாளருக்கு விருதுத் தொகையாக ரூபாய் இரண்டு இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பிக்கப்பெறுவார்.

இவ்விருது முதலமைச்சர் அவர்களால் திருவள்ளுவர் திருநாளான 15.1.2025 அன்று சென்னையில் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

---

## திருவள்ளூர் மத்திய மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஆளுநரைக் கண்டித்து

# ஆவடி மற்றும் திருவள்ளூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## டி.கே.எஸ். இளங்கோவன் – கோ. திராவிட பக்தன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

*திருவள்ளூர், ஜன.8*

தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும் ஒன்றிய அரசின் ஏஜெண்ட்டாக தமிழ்நாட்டின் உரிமைகளில் அத்துமீறல்களைச் செய்யும் ஆளுநரை காப்பாற்றிடவும் ஒன்றிய அரசின் மீதுள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசை மாற்றவும் வித்தைகளை செய்யும்

அ.தி.மு.க. - பா.ஜ.க. கள்ளக்கூட்டணியைக் கண்டித்தும் திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஆவடி எச்.வி.எப். அண்ணா சிலை எதிரில் தலைமை கழக செய்தி தொடர்பு குழு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது.

அதேபோல் திருவள்ளூர் ரயில் நிலைய அருகில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக திமுக சார்பில் மாவட்ட அவைத்தலைவர் கோ.திராவிட பக்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாட்டையும் தமிழ்த் தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்தும் கழகத்தினர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், திருத்தணி எம். பூபதி, ஆவடி மேயர் ஜி.உதயகுமார், பூந்தமல்லி தொகுதி பார்வையாளர் பி.டி.சி.செல்வராஜ் மாநில மாவட்ட நிர்வாகிகள் சி. ஜெரால்டு, மாநில விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி. ஆதிசேஷன், மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஓ. ஏ. நாகலிங்கம், தொகுதி பார்வையாளர் மாஸ்டர் சேகர், மா.ராஜ், வி. ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார்,

சி.ஜெயபாரதி, உதயமலர்பொன் பாண்டியன், மிதுன் சக்கரவர்த்தி, பொதுகுழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், வி.குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனா சுதாகர், பா. சிட்டிபாபு, கே.எம். சுப்பிரமணி, ராஜேஸ்வரிரவிந்தநாத்,

மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், ஜி. ராஜேந்திரன், பேபிசேகர், டி.தேசிங்கு, என்.இ.கே. மூர்த்தி, டி.ராமகிருஷ்ணன், ஆர்.ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், ப.ச. கமலேஷ், ஜி.ஆர்.திருமலை, தி.வை.ரவி, தி. வே.முனுசாமி, தங்கம் முரளி, சி.சு. ரவிச்சந்திரன், கூளூர் ராஜேந்திரன், எஸ். மகாலிங்கம், கா.அரிகிருஷ்ணன், மோ. ரமேஷ், கிறிஸ்டி அன்பரசு, என். கிருஷ்ணன், வி.வினோத்குமார், சி.என்.சண்முகம், பெ.பழனி, பி.டி. சந்திரன், கே. ராஜேந்திரன், டி.ஆர். கே.பாபு உள்பட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.